சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.261/2022**

2024ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07ம் நாள் புதன்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.எம்.சித்ரா, தலைமைஎழுத்தர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயமணி | தொழில் | |
| தந்தை பெயர் | சின்னசாமி | ஜாதி | |
| கிராமம் | கீழ்அரசம்பட்டு | சமயம் | |
| தாலுக்கா | வேலூர் | வயது | |

**07.02.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதிதரப்பு சாட்சி ஆவேன். வாதி, பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஒப்பந்த பத்திரம் நான் தயாரித்த ஆவணம் தான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தயாரித்தவர் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்து தான். வா.சாஆ.1ல் உள்ள என் கையெழுத்து **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.